# மண்டல செஸ் போட்டி கிங்ஸ்டன் இன்ஜி. கல்லூரி முதலிடம் பிடித்து சாதனை

வேலூர், செப்.19–

மண்டல அளவிலான செஸ் போட்டியில் கிங்ஸ்டன் பொறியியல் கல்லூரி முதலிடம் பிடித்தது.

அண்ணா பல்கலைக்கழக 6வது மண்டல அளவில் ஆண்களுக்கான செஸ் போட்டிகள், ஆரணி பல்கலைக்கழக உறுப்புக்கல்லூரியில் நடந்தது. இதில், வேலூர், திருவண்ணாமலை, காஞ்சிபுரம் மேற்கு மாவட்ட பொறியியல் கல்லூரி அணிகள் பங்கேற்றன.

இந்த போட்டியில், காட்பாடி கிங்ஸ்டன் பொறியியல் கல்லூரி மாணவர்கள் முதலிடம் பிடித்து கோப்பையை வென்றனர். வெற்றிபெற்ற மாணவர்களையும், அவர்களுக்கு பயிற்சி அளித்த உடற்கல்வி இயக்குனர்களையும் கல்லூரி நிறுவன தலைவர் கதிர்ஆனந்த், முதல்வர் ரவிக்குமார் பாராட்டினர்.

சென்னை ஆர்.கே.நகர் தொகு

## கணவர் சாவில் மர்மம்

வேலூர், செப். 19–

காட்பாடி அடுத்த பள்ளிக்குப்பத்தை சேர்ந்தவர் பழனி (40), டிரைவர். 8 ஆண்டுகளாக போதை பழக்கம் இருந்ததால், மறுவாழ்வு இல்லத்தில் சிகிச்சை பெற்றுவந்தார். திடீரென உடல்நலக்குறைவு ஏற்படவே, அடுக்கம்பாறை அரசு மருத்துவமனைக்கு கொண்டு செல்லப்பட்டார். பரிசோதித்த டாக்டர்கள், அவர் இறந்துவிட்டதாக கூறினர். சாவில் சந்தேகம் இருப்பதாக சத்துவாச்சாரி போலீசில் மனைவி புகார் கொடுத்தார்.




அண்ணா பல்கலைக்கழகம் சார்பில், 6வது மண்டல அளவில் ஆண்களுக்கான செஸ் போட்டிகள் ஆரணி பல்கலைக்கழக உறுப்புக்கல்லூரியில் நடந்தது. இதில், வெற்றி பெற்ற காட்பாடி கிங்ஸ்டன் பொறியியல் கல்லூரி மாணவர்களுடன் முதல்வர் ரவிக்குமார் மற்றும் உடற்கல்வி இயக்குனர்கள்.